**JUDICIAL MAGISTRATE COURT, No.II CHENGALPATTU**

**CC No. 118 /2015**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE, No.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW 1 |
| Name | : Mahima Datt Pathak |
| Father's Name | : Dr. B.D. Pathk |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 67 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.11.2022.

**முதல் விசாரணை தொடர்ச்சி–**

KPMG இன் இறுதியறிக்கையின் நகல்கள் நீதிமன்றத்தில் குற்ற பத்திரிக்கையுடன் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. இறுதியறிக்கையானது நகல்கள் என்பதனால் இவ்வழக்கில் குறியீடு செய்யபடவில்லை. 17.06.2013 அன்று KPMG இன் இறுதியறிக்கைகள் பெறப்பட்டது. போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை எதிரி 1**

போலிசார் என்னை விசாரணை செய்த தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் போலிசாரிடம் விசாரணையின் போது ஆங்கிலத்தில் தான் பேசினேன். சுமார் 5 1/2 ஆண்டுகளாக நான் வேப்கோ நிறுவனத்தில் பணிபுரிந்தேன். இந்த நிறுவனத்திற்கு கிளைகள் கிடையாது. முத்துமாலை இந்த நிறுவனத்தில் 2007ஆம் ஆண்டு பணியில் சேர்க்கப்பட்டார். முத்துமாலையின் அறையின் அளவு எனக்கு ஞபாகமில்லை. நான் எவ்வளவு தொகை முத்துமாலையின் அறையிலிருந்து எவ்வளவு தொகையை கைப்பற்றினேன் என்பது ஞாபகமில்லை. போலிஸ் விசாரணையில் நான் முத்துமாலையின் அறையிலிருந்து

ரூ.17.86 இலட்சம் கைப்பற்றிய விவரம் சொல்லியுள்ளேன். ரூ.17.86 இலட்சத்தை தவிர வேறு எந்த பணமும் கைப்பற்றவில்லை. மேற்சொன்ன பணத்தை கைப்பற்றியத்திற்கு எந்த ஆவணமும் நான் தயாரித்து அதனை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பவில்லை. நான் சொல்வதுபோல் முத்துமாலையின் அறையிலிருந்து எந்த பணமும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல.

2. போலிசாரிடம் நான் எந்த சிடியையும் ஒப்படைக்கவில்லை. KPMG நிறுவனம் ம்த்துமாலையிடமிருந்து ( Hard Disk) கைப்பற்றினர். KPMG அறிக்கையின் அடிப்படையில் புகார் கொடுக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் தணிக்கையாளர் யார் என்று தெரியாது. ஒவ்வொரு ஆண்டும் நிறுவனத்தின் தணிக்கை நடைபெறும். முத்துமாலை ஒவ்வொரு மாதமும் 26தேதிக்குள் கொடுக்கப்படாத சம்பளத்தினை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பார். 25.04.2013 முத்துமாலையின் அறை மூடப்பட்டது என்றால் தெரியாது. முத்துமாலை போனஸ் பணமோ அல்லது சம்பளம் தரவில்லை என்று எந்த புகாரும், எந்த ஒரு தொழிலாளிகளிடமிருந்து வரவில்லை என்றால் அதை பற்றி எனக்கு சரியாக தெரியாது. முத்துமாலையின் அறையிலிருந்து அவருக்கு தெரியாமல் காலியான(Hard Disk) எடுக்கப்பட்டு வழக்கிற்கு ஏற்றவாறு விவரங்கள் அந்த ( Hard Disk) ல் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை எதிரி 2**

எந்த ஒரு நபரும் நிறுவனத்தில் வேலைக்கு சேரும்போது அவர் என்னனென்ன வேலை செய்யவேண்டும் என்பதனை குறித்து தகவல்கள்(Chart) கொடுக்கப்படும். 08.03.2013 அன்று எதிரி 2 ஆனவர் இந்த நிறுவனத்தில் 3 மாத நோட்டிஸ் தெரிவித்து விட்டு இந்நிறுவனத்தில் இருந்து விலகிவிட்டார். வேப்கோ நிறுவனம் எதிரி 2ஐ இதே நிறுவனத்தில் வேலை செய்யுமாறு வற்புறுத்தினர் என்றும் ஆனால் அவர் மறுவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரி 2 ன் மீது பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

Sd. xxxxxx

Judicial Magistrate No.II
Chengalpattu.

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.